மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வை அப்போது கொண்டு வந்தார்கள். தமிழ்நாட்டிற்குள் அது வரக் கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்றது, தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான், விரும்புகிற மாநிலங்கள் மட்டும் அதை நிறைவேற்றலாம் என்று நீதிமன்றத் தீர்ப்பை வாங்கிக் கொடுத்த தலைவர் அன்று முதலமைச்சராக இருந்த கலைஞர் என்பதை மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்) அந்த அடிப்படையில், தலைவர் கலைஞர் இருக்கிற வரை நீட் தேர்வு இங்கே நுழையவில்லை; ஏன் உங்கள் முதலமைச்சர், அம்மையார் இருக்கிறபோதுகூட நீட் தேர்வு நுழையவில்லை; ஆனால், நீங்கள் வந்தபோது நீட் தேர்வு நுழைந்துவிட்டது. நீதிமன்றத்தின்மூலம் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அப்போதுகூட Article 162 என்று சொன்னார். எத்தனையோ கோப்புகள் தேங்கிக் கிடப்பதை நாம் பார்க்கிறோம். 45 நாட்கள் சென்ற பிறகும் நீங்கள் ஆளுநரைப் பார்க்கவில்லை. அதையெல்லாம் பார்த்து, முடித்தது இந்த அரசு என்பதைத்தான் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

பிற்பகல் 1–20

8. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 4–5–2022 (புதன்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) 5–5–2022 (வியாழக்கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப்பெறும்.

5–5–2022 (வியாழக்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை 4–5–2022 (புதன்கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப்பெறும்.

2022 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

7–5–2022 (சனிக்கிழமை) மற்றும் 9–5–2022 (திங்கட்கிழமை) ஆகிய நாட்களில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை) மற்றும் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 9–5–2022 (திங்கட்கிழமை) மற்றும் 10–5–2022 (செவ்வாய்க்கிழமை) ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்ளப்பெறும். 9–5–2022 (திங்கட்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, 16–நிதித் துறை, 35–மனிதவள மேலாண்மைத் துறை, 50–ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் மற்றும் 10–5–2022 (செவ்வாய்க்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 38–பொதுத் துறை, 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, 1–மாநிலச் சட்டமன்றம், 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகியன 7–5–2022 (சனிக்கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் அறிவிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 19–மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

***டாக்டர் நா. எழிலன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவத் துறை சமூகச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தும்போது மருத்துவத் துறையின் பயன்கள் கடைநிலை வரை சென்றடையும். அதனடிப்படையில்தான் 'திராவிட மாடல்' ஆட்சி முறை என்பது சமூகச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தியதற்குப் பின் விளிம்பு நிலை மக்களுக்குக் கல்வி, சுகாதாரம், அரசியல் உரிமைகளைக் கொடுப்பது; 'திராவிட மாடல்' ஆட்சி செய்யும் விளிம்புநிலை*